## பண்ணுருட்டி நகராட்சி

## *மன்ற கூட்ட அழைப்பிதழ்*

*************

பண்ணுருட்டி நகரமன்றத்தின் **சாதாரண கூட்டம் ஸ்ரீ சோபகிருது வருடம்** தமிழ் மாதம் **மாசி 09 நாள் 21.02.2024 புதன்கிழமை காலை** 11.30 மணிக்கு, நகராட்சி அலுவலகத்திலுள்ள **"பேரறிஞர் அண்ணா மன்ற கூடத்தில்"** நடைபெறவுள்ளது.

அவ்வமயம் நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**நகரமன்ற தலைவர்,**
**பண்ணுருட்டி நகராட்சி.**

# பண்ணுருட்டி நகராட்சி

பண்ணுருட்டி நகராட்சி நகரமன்ற **சாதாரண கூட்டம்** 21.02.2024ந் தேதி புதன்கிழமை **காலை** 11.30 மணிக்கு பண்ணுருட்டி நகராட்சி அலுவலகத்தில் உள்ள **"பேரறிஞர் அண்ணா"** மன்ற கூடத்தில் நடைபெறும் **சாதாரண கூட்டத்திற்கு** நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**நகரமன்ற தலைவர்,**
**பண்ணுருட்டி நகராட்சி.**

1. ஆணையாளர் அவர்களின் ஜனவரி –2024 மாதங்களுக்கான நாட்குறிப்பேடு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

**<u>அலுவலக குறிப்பு :</u>** மன்றம் பதிவு செய்யலாம் .

2. இந்நகராட்சியில் கணினி பரிண்டருக்கு தேவையான 12A, 88A, டோனர் மற்றும் 158 powder (2606 GSDN Printer) புதிதாக வாங்குவதற்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்ட நிறுவனங்களிலிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | GRK Associates | 1,18,000.00 |
| 2. | Techno solution | 1,15,000.00 |
| 3. | AIMS Net Cafe | 1,09,750.00 |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள வ.எண்.3 AIMS Net Cafe Tour & Travels Sales & Service நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கவும் அதற்குண்டான தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1 .மன்றம் அனுமதிக்கலாம்

2.இதற்குண்டான தொகை பொது நிதியில் செலவு செய்ய அனுமதிக்கலாம்.

3. வாலாஜா வாய்க்கால் தூர்வாரி சுத்தம் செய்வதற்கான பணிக்கு 7.11.23 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கீழ்க்காணும் விபரப்படிக்கான ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | நிறுவனம் | வாடகை(ஊதியம்)மணிக்கு | |
|---|---|---|---|
| | | பெரியது | சிறியது |
| 1. | ஸ்ரீ பிரம்மநாத சுவாமி கன்ஸ்ட்ரக்ஷன் , பண்ருட்டி | ரூ. 2000/– | ரூ. 1400/– |
| 2. | சுரேஷ்பாபு S/O வாசுதேவன், பண்ருட்டி | ரூ. 2100/– | ரூ. 1500/– |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**அலுவலக குறிப்பு:**

1. வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசைஎண்.1ல் காணும் ஸ்ரீ பிரம்மநாத சுவாமி கன்ஸ்ட்ரக்ஷன் நிறுவன ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதால் அதனை மன்றம் முடிவு செய்யலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடரப்பட்டதை மன்றம் ஏற்கலாம்.

**கோ.எண்.206/2021/H1**

4. இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் 33 வார்டுகளில் அன்றாட தூய்மைப்பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வரும் நீர்த்த சுண்ணாம்புத்தூள் (Slacked Lime) இருப்பு குறையாக உள்ளது. தற்போது பொங்கல் பண்டிகை மற்றும் ஆற்றுத்திருவிழா நடைபெற உள்ளதால், நீர்த்த சுண்ணாம்புத்தூள் வாங்க வேண்டியது அவசியமாக உள்ளது. எனவே, அவசர அவசியம் கருதி 5டன் சுண்ணாம்புத்ததூள் அரசு அங்கீகாரம் பெற்ற திருச்சி, மல்டிபர்பஸ் இன்கோ என்ற நிறுவனத்திடம் வாங்கிடவும், அதற்கான தோராய செலவினம் ரூ.50,000/– மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) இச்செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
இ) அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை தொடரப்பட்டதை மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண்.104/2024/எச்1)**

5. இந்நகராட்சியின் உபயோகத்திற்கு தேவையான பதிவேடுகள் மற்றும் படிவங்கள், அம்மா உணவகத்திற்கு தேவையான டோக்கன்கள், A4பேப்பர், Legal பேப்பர் ஆகிய அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான பொருட்களை அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனத்தில் வாங்க உத்தேச செலவு ரூ.5.00 (ஐந்து லட்சம் மட்டில்) மன்றத்தின் அனுமதிக்கு கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.532/2023/சி1**

6. இந்நகராட்சியில் உள்ள கணினி மற்றும் கணினி சார்ந்த சாதனங்கள் பழுது ஏற்படாமலும் நிர்வாக பணிகள் தாமதம் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு 01.06.2023 முதல் 31.05.2024 வரை உள்ள காலத்திற்கு கணினி ஆண்டு பராமரிப்பு (Annual Maintenance Contract) செய்வதற்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்ட நிறுவனங்களில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள்.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | Techno Solution | 2,98,000 |
| 2. | AIMS Net Cafe | 2,96,500 |
| 3. | GRK Associates | 2,99,000 |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள AIMS Net Cafe Tours & Travels. Sales, Service நிறுவனத்திற்கு பணி ஆணை நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று வழங்கியதை மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.383/2023/அ1**

**7.** பண்ணுருட்டி நகராட்சியில் இந்திய தாய்திருநாட்டின் குடியரசு தினவிழாவினை 26.01.2024–ல் மிகவும் சிறப்பாக கொண்டாடும் பொருட்டு அழைப்பிதழ்கள் அச்சடிக்கவும், கொடி தோரணங்கள் வாங்கிடவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.5,500/–ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று செலவினம் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**கோ.எண்.261/2014/சி1**

**8.** பண்ணுருட்டி நகராட்சி – 15th Finance Commission Health Grant 2023–24 நிதியின் கீழ் வார்டு எண். 20 கும்பகோணம் ரோட்டில் உள்ள அரசு மருத்துவமனை வளாகத்தில் கூடுதலாக புதிய கட்டிடம் அமைக்கும் இடத்தில் மண் மாதிரி பரிசோதனை செய்ய **(SPAN CHECK ASSOCIATES STRUCTURAL & GEO CONSULTANT )** மூலம் கடந்த 14.12.2023 அன்று கடிதத்தின் படி கீழ் கண்டவாறு அனுப்பியுள்ளார்கள்.

**(BORE HOLE)**

| SI.No | Description | Amount per item | No.of Bore Holes | Amount |
|---|---|---|---|---|
| 1. | Transportation | 4000 | - | 4000 |
| 2. | Up to 10m | 4000 | 2 | 8000 |
| 3. | Lab testing charges | 10000 | 2 | 20000 |
| 4. | Report preparation charges | 2500 | 1 | 2500 |
| | | | **Total** | **34500** |

பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட இடம் மண் பரிசோதனை செய்து முடித்ததற்கு தொகையை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு வருவாய் நிதி 2023–24ன் கீழ் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.2395/2023/இ1)**

9. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் **15 CFC 2023-24** நிதியின் கீழ் வார்டு எண்.01 சிவன் படை தெரு, வார்டு எண்.02 பிள்ளையார் கோவில் தெரு, பொன்னப்பன் தெரு, நால்வர் தெரு, வார்டு எண்.03 தர்கா வண்டிமேடு 1st மற்றும் 2nd வது தெரு, வ.உ.சி தெரு, வார்டு எண்.04 நாடார் காலனி, தனபால் தெரு, அப்பாலு தெரு ஜங்ஷன் வார்டுஎண்.05 மாரியம்மன் கோவில் தெரு, ஜவகர் தெரு, வார்டு எண்.06 அம்பேத்கர் குறுக்கு தெரு வார்டு எண்.07 திருவள்ளுவர் நகர் 3வது தெரு 3வது குறுக்கு தெரு, 4வது தெரு, 5வது தெரு, வார்டு எண்.08 ஆதம் கான் தர்கா தெரு, வார்டு எண் 13 குட்டை முதல் மற்றும் குறுக்கு தெரு, வால்கார தெரு, வார்டு எண்.14 எம்.ஜி.ஆர் நகர், கரவகார தெரு, வார்டு எண்.16 குப்ப கவுண்டர் தெரு, வார்டு எண்.17 தண்டுபாளையம் காலனி, குறுக்கு தெரு, போலீஸ் லைன் 6வது தெரு குறுக்கு தெரு, வார்டு எண்.18 போலீஸ் லைன் 4வது தெரு, 5வது தெரு வார்டு எண். 19 காமராஜ் குறுக்கு தெரு, வார்டு எண்.21 குட்டை தெரு, வ.உ.சி தெரு வார்டு எண்.23 வானூவர் தெரு ,வார்டு எண். 24 சட்டநாதன் தெரு, வார்டு 25. ஆதி பிள்ளை தெரு, தட்டாஞ்சாவடி ஜங்ஷன் வார்டு எண்.27 அய்யனார் கோவில் பாட்டை குறுக்கு தெரு, வார்டு எண். 29 வ.ஊ.சி தெரு மற்றும் குறுக்கு தெரு, வார்டு 31 நேதாஜி நகர், மற்றும் வி.எஸ்.பி நகர் ஆகிய பகுதிகளில் சிறுபாலம் புணரமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.47.00/-இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் ந.க.எண்:16490/2023/EA-2 நாள்: 01/12/2023 தேதிய கடிதத்தில் அனுமதி வழங்கியதற்கிணங்க 27.12.2023-ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் ( **மதிப்பீட்டை விட** ) |
|---|---|---|---|
| 1 | திரு.வி.சுரேஷ்பாபு , ஒப்பந்ததாரர் , கடலூர். | 47.00 | 0.04 % சதவிகிதம் குறைவு |
| 2 | **M/s. RDR Construction** ஒப்பந்ததாரர் , பண்ணுருட்டி . | 47.00 | 0.18 % சதவிகிதம் அதிகம் |

அலுவலக குறிப்பு:-

1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.வி.சுரேஷ்பாபு , கடலூர் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, மதிப்பீட்டை விட 0.04 **%** சதவீதம் குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**கோ.எண். 2451/2024/இ1)**

10. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் **வருவாய் நிதி 2023-24 நிதியின்** கீழ் வார்டு எண். 20 கும்பகோணம் ரோட்டில் உள்ள அரசு மருத்துவமனை வளாகத்தில் கூடுதலாக புதிய கட்டிடம் அமைக்கும் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யும் பணி - கலந்தாலோசகர் நிறுவனமாக செயல்படுதல் பணிக்கு மதிப்பீடு ரூ.11.00 இலட்சத்திற்கு நகரமன்ற தலைவரின் முன் அனுமதி நாள்.19.01.2024 தேதிய கடிதத்தில் அனுமதி வழங்கியதற்கிணங்க 28.12.2023-ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் ( மதிப்பீட்டை விட ) |
|---|---|---|---|
| 1 | Glency Docmra Consultants Indian Pvt Ltd. Madipakkam Chennai-91 | 11.00 | 16.67 சதவிகிதம் குறைவு |
| 2 | Eclat, Chennai | 11.00 | 11.11 சதவிகிதம் அதிகம் |

<u>அலுவலக குறிப்பு–</u>

1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் GLENCY DOCMRA, CHENNAI ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, **மதிப்பீட்டை விட 16.67 % சதவீதம் குறைவாக** கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(கோ.எண். 2395/2023/இ1)

11. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் **வருவாய் நிதி 2023–24 நிதியின்** கீழ் வார்டு எண். 20 கும்பகோணம் ரோட்டில் உள்ள அரசு மருத்துவமனை வளாகத்தில் கூடுதலாக புதிய கட்டிடம் அமைக்கும் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யும் பணி – கலந்தாலோசகர் நிறுவனமாக செயல்படுத்திட மதிப்பீடு ரூ11.00 லட்சம் மட்டும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளுக்கு வருவாய் நிதி 2023–24ன் கீழ் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.
3. மேற்கண்ட பணிக்கு நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். ( 2395/2023/இ1)**

12. பண்ணுருட்டி நகராட்சி – வருவாய் நிதி 2024–25ன் கீழ் **வார்டு எண்.26** களத்துமேடு பகுதியில் அதிகமாக நகராட்சி இடத்தை ஆக்கிரமிப்பு செய்து வருகின்றனர். அதனைத் தடுக்கும் பொருட்டு நகராட்சி இடத்தை மீட்பதற்கு நான்கு பகுதிகளிலும் அனைத்து முள்வேளி அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.8.00/– இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு வருவாய் நிதி 2024–25ன் கீழ் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண். 268/2024/இ1)**

13. பண்ணுருட்டி நகராட்சி – வருவாய் நிதி 2024–25ன் கீழ் **வார்டு எண்.29** தேவராஜ் நகரில் கட்டடப்பட்ட MCC வளாகத்திற்கு சுற்றுச்சுவர், நடைபாதை மற்றும் மின்விளக்கு அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.10.00/– இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு வருவாய் நிதி 2024–25ன் கீழ் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண். 266/2024/இ1)**

14. பண்ணுருட்டி நகராட்சி – வருவாய் நிதி 2024–25ன் கீழ் **வார்டு எண்.31** நேதாஜி நகர் பகுதியில் உள்ள MCC வளாகத்திற்கு மின் இணைப்பு அமைக்கும் பணி, மோட்டார் பழுது சரி செய்தல், GI Sheet தடுப்பு அமைத்தல், மற்றும் நுழைவாயிலில் உள்ள சாலை மிகவும் பழுதடைந்து மழைக்காலங்களில் வண்டிகள் செல்ல முயலாத காரணத்தினால் சாலை அமைக்கும் பணிக்கும் மேற்கண்ட பணிகள் செய்ய தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.5.00/– இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு வருவாய் நிதி 2024–25ன் கீழ் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண். 265/2024/இ1)**

15. பண்ணுருட்டி நகராட்சி – வருவாய் நிதி 2024–25ன் கீழ் **வார்டு எண்.24** மணிநகர் MCC கட்டிடத்திற்கு 3 Phase EB மின் இணைப்பு வாங்குதல், மின்சார விளக்குகள் அமைத்தல், கழிவு நீர் சேகரிப்புத் தொட்டி, மற்றும் இதர பராமரிப்பு பணிகள் செய்வதற்காக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.2.00/– இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு வருவாய் நிதி 2024–25ன் கீழ் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண். 264/2024/இ1)**

16. பண்ணுருட்டி நகராட்சி – வருவாய் நிதி 2024–25ன் கீழ் **வார்டு எண்.17** போலீஸ்லைன் 8வது தெரு பகுதியில் பருவ மழைக் காலங்களில் மழைநீர் சாலையில் தேங்குவதால் அப்பகுதி பொதுமக்களுக்கு போக்குவரத்தில் மிகவும் சிரமம் ஏற்படுகிறது. எனவே பொதுமக்களிடமிருந்து புகார் வந்த வண்ணம் உள்ளது. மேலும், நகரமன்ற உறுப்பினர் மற்றும் நகரமன்ற தலைவர் மேற்கண்ட பகுதியில் மழைநீர் வடிகால் வாய்க்கால் அமைக்க கேட்டுக்கொண்டதன் பேரிலும் பொதுமக்களின் பாதுகாப்பு நலன் கருதியும் மேற்கண்ட பகுதியில் புதியதாக மழை நீர் வடிகால் வாய்க்கால் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.13.50/– இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளுக்கு வருவாய் நிதி 2024–25ன் கீழ் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண். 263/2024/இ1)**

17. பண்ணுருட்டி நகராட்சியில் 15வது மத்திய நிதிக்குழு மான்யம் 2022–23 Tied Grant நிதியின் கீழ் மதிப்பீடு ரூ.76.40 இலட்சத்தில் நகராட்சிக்கு 8 எண்ணிக்கை LCV வாகனம் மற்றும் 9 எண்ணிக்கை BOV வாகனம் வாங்கி வழங்கும் திட்டப்பணிகளை பற்றி விளம்பரம் வெளியிடப்பட்டதற்கு DNA CHAITHI AND DECCAN CHRONICLE என்ற நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ .59,745/– யை மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளுக்கு வருவாய் நிதியின் கீழ் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண். 733/2023/இ1)**

**18.** பண்ணுருட்டி நகராட்சி வருகூவ் நிதி 2024-25ன் குழ் வார்டு எண்.27 பஞ்சவர்ணம் நகரில் உள்ள அங்கன்வாடி மிகவும் பழுதடைந்துள்ளதால் அதனை இடித்து விட்டு புதியதாக அங்கன்வாடி கட்டிடம் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.16.00/- இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளுக்கு வருவாய் நிதி 2024-25ன் கீழ் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண். 267/2024/இ1)**

19. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் NUHM-SHS-TN (புதிய நகர்ப்புற சுகாதார துணை நிலையம் 2023-24ன் கீழ் மதிப்பீடு ரூ.**30.00** இலட்சத்திற்கு பண்ணுருட்டி நகராட்சி ஆணையர் அவர்களின் ந.க.எண்.296/2023/இ1, நாள் 16.11.2023 தேதிய கடிதத்தில் வார்டு.ஏ, பிளாக் 29, TS NO.27, வார்டு எண்.25 உழவர் சந்தை பகுதியில் புதியதாக நகர்ப்புற சுகாதார துணை நிலையம் அமைக்கும் பணிக்கு அனுமதி வழங்கியதற்கிணங்க 22.12.2023-ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்** | **ஒப்பந்ததாரரின் பெயர்** | **மதிப்பீடு (ரூ இலட்சத்தில்)** | **ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (மதிப்பீட்டை விட)** |
|---|---|---|---|
| 1 | RDR CONSTRUCTION PANRUTI | 30.00 | 1.08 சதவிகிதம் குறைவு |
| 2 | திரு.வி.சுரேஷ்பாபு, ஒப்பந்ததாரர், கடலூர் | 30.00 | 0.61 சதவிகிதம் அதிகம் |

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் RDR CONSTRUCTION, PANRUTI ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 1.08% சதவிகிதம் குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2919/2023/இ1)**

**20.** பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளிலும் ஆக்கிரமிப்பு மற்றும் பிறப்பொருள் தொடர்பாக பண்ணுருட்டி உரிமையியல் நீதிமன்றம், கடலூர் மாவட்ட நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்றத்தில் பண்ணுருட்டி நகராட்சி ஆணையர் அவர்களை பிரதிவாதியாக சேர்த்து அவ்வப்போது வழக்குகள் தொடரப்பட்டு வருவதால் உடனுக்குடன் வழக்கறிஞர்கள் ஆஜராகவும், நீதிமன்ற கட்டணம் மற்றும் வழக்கறிஞர் கட்டணம் வழங்குவதில் சிரமம் ஏற்படுகிறது.

எனவே நகரமைப்பு பிரிவு சம்பந்தமாக மேற்கண்ட நீதிமன்றங்களில் தொடரப்படும் வழக்குகளுக்கு நகராட்சி ஆணையாளர் சார்பாக வழக்கறிஞர்கள் ஆஜராகவும் 01.01.2024 முதல் 31.12.2024 வரையிலான காலங்களில் தொடரப்படும் வழக்குகளுக்கு வழக்கறிஞர் கட்டணம் செலுத்த தோராய செலவினம் ரூ.1.00 இலட்சம் (ரூபாய். ஒரு இலட்சம் மட்டும்) நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>** 1. மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 10/2024/எப்1)**

21. பண்ணுருட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட விழமங்கலம் கிராமம், வார்டு A, பிளாக் எண்.2, நகரளவு எண்.12/11 (பழைய சர்வே எண்.69/2, 70/4. 70/5 (ம) நகர அளவை எண்.12/17 பழைய T.S.No.12/13) பழைய சர்வே எண். 72/2, 72/3–ல் 2.42 1/2 ஏக்கர் அல்லது 9818.00 ச.மீ. பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு, நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கடலூர் அவர்களின் கடித ந.க.எண்.73 PTM5KJ/2023/2023/TCP, நாள்27.11.2022–ல் மனைப்பிரிவு வரைப்படத்திற்கு ம .வ/ந.ஊ.உ.இ(க.மா) எண்.132/2023 என எண்ணிடப்பட்டு இணைப்பிலுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளுக்குட்பட்டு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

<u>பொது ஒதுக்கீடு</u>

<u>உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட வேண்டியது</u>

| | |
|---|---|
| **மனைப்பிரிவு சாலைகள் (ம) மூலை முடக்குகள்** | 3380.23 ச.மீ |
| **உள்ளாட்சிக்கு (A)** | 49.58 ச.மீ |
| **மின்சார துறைக்கு (B)** | 49.88 ச.மீ |

மனைப்பிரிவு உரிமையாளரால் மனைப்பிரிவு வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளபடி சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகள் நகராட்சிக்கு தானமாக தானப்பத்திரம் எண். 3985 நாள்.17.10.2023–ல் ஒப்படைக்கப்பட்டு அசல் தானப்பத்திரம் பெறப்பட்டுள்ளது.

மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி மேற்படி மனைப்பிரிவில் அடிப்படை வசதிகளான மழைநீர் வடிகால், சிறுபாலம், தெருவிளக்கு அமைத்தல் மற்றும் குடிநீர் வசதிக்காக PVC குழாய் அமைத்தல் பணிக்காக பொறியியல் பிரிவு மூலம் ரூ. 20.85 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மனைப்பிரிவு உரிமையாளரால் நகராட்சி கருவூலத்தில் ரசீது எண் .095/001/1/23–24/0014816, நாள்.02.01.2024–ல் அபிவிருத்தி கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

சிறப்பு நிபந்தனைகள் எண்.3–ல் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி மேற்கண்ட மனைப் பிரிவில் தானமாக பெறப்பட்ட சாலைகள் (ம) பொது ஒதுக்கீடுகள் நகராட்சி பெயருக்கு உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கடலூர் அவர்களின் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள மனைப்பிரிவிற்கு நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது .

<u>அலுவலக குறிப்பு:–</u>

1.மேற்படி மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி மனைப்பிரிவு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகள் ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.2182/2023/F1)**

22. பண்ணுருட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட திருவதிகை கிராமம், வார்டு C, பிளாக் .3, நகரளவு எண்.11/2 (18/2) 0.52 ஏக்கர் அல்லது 2100 ச.மீ. பரப்பளவில் அமையும் கேப்டன் நகர் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு, நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கடலூர் அவர்களின் கடித ந .க.எண்.40QQHCXS/13042TCP/2023, நாள் 17.08.2023–ல் மனைப்பிரிவு வரைப்படத்திற்கு ம .வ/ந.ஊ.உ.இ(க.மா) எண்.86/2023 என எண்ணிடப்பட்டு இணைப்பிலுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளுக்குட்பட்டு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

<u>பொது ஒதுக்கீடு</u>

<u>உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட வேண்டியது</u>

| | |
|---|---|
| **மனைப்பிரிவு சாலைகள் (ம) மூலை முடக்குகள்** | 882.03 ச.மீ |
| **உள்ளாட்சிக்கு (A)** | 25..00 ச.மீ |
| **மின்சார துறைக்கு (B)** | 25.88 ச.மீ |

மனைப்பிரிவு உரிமையாளரால் மனைப்பிரிவு வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளபடி சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகள் நகராட்சிக்கு தானமாக தானப்பத்திரம் எண்.2618 நாள்.19.07.2023-ல் ஒப்படைக்கப்பட்டு அசல் தானப்பத்திரம் பெறப்பட்டுள்ளது.

மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி மேற்படி மனைப்பிரிவில் அடிப்படை வசதிகளான மழைநீர் வடிகால் , சிறுபாலம், நகராட்சி மற்றும் மின்சாரவாரியத்திற்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட இடத்தில் முள்வேலி அமைத்தல், தெருவிளக்கு அமைத்தல் மற்றும் குடிநீர் வசதிக்காக PVC குழாய் அமைத்தல் பணிக்காக பொறியியல் பிரிவு மூலம் ரூ.9,96,000/-க்கு (ரூபாய் ஒன்பது லட்சத்து தொண்ணூற்றி ஆறாயிரம் மட்டில்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மனைப்பிரிவு உரிமையாளரால் நகராட்சி கருவூலத்தில் ரசீது எண் .095/001/1/22-23/0016741 நாள்.01.02.2024-ல் அபிவிருத்தி கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கடலூர் அவர்களின் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள மனைப்பிரிவிற்கு நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது .

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1.மேற்படி மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி மனைப்பிரிவு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகள் ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 1829/2023/எப். 1)**

**23.** இந்நகராட்சியில் மின்பணி உதவியாளராக பணிபுரிந்து பணிக்காலத்தில் **28.11.2012** –ல் காலமானதால் அன்னாரின் வாரிசும் மகனுமான **திரு.ஸ்ரீநிவாஸ் த/பெ. ஆறுமுகம்** என்பவர் தனது தந்தையின் வாரிசு வேலையை தனக்கு வழங்க கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண். **921/2024**–ல் வழக்கு தொடர்ந்துள்ளார். வழக்கினை முடித்து கொடுத்துள்ளதாக கேட்டு சென்னை உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞர் கட்டணம் ரூ. **25,000/–**ம் வழங்க கோரி கடிதம் வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட தொகை வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

**1.** மன்றம் அனுமதிக்கலாம்

**2.**மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**கோ. எண். 967/2023/சி1**

**24.** அரசாணை (நிலை) எண்.145, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA2) துறை, நாள்.14.10.2022-ல் பண்ணுருட்டி நகராட்சியில் 1 முதல் 33 வார்டுகளில் உள்ள 2106 எண்ணிக்கை தெருவிளக்குகளை LED விளக்குகளாக மாற்றி அமைப்பதற்கான மதிப்பீடு தொகை ரூ.239.74 இலட்சம் State Urban Infrastructure Development Fund (SUIDF) திட்டத்தின் கீழ் கடனாக பெற்று பணியினை மேற்கொள்ளவும், 6 வருட காலத்திற்கு 5% வட்டியுடன் கடன் தொகையினை TUFIDCO நிறுவனத்திற்கு திரும்ப செலுத்திடவும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது கடிதம் எண். 27000/2021/EA-2, நாள். 12.01.2024 -ல் கடன் தொகை பெறுவதற்கு மன்ற அனுமதி பெற்று ஒப்பந்தம் செய்து கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இத்திட்டத்தின் கீழ் Tamil Nadu Urban Finance Infrastructure Development Corporation Ltd (TUFIDCO) நிதி நிறுவனத்தின் மூலம் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு கடன் தொகை பெறுவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

1. Resolved that the Panruti Municipality is authorised to borrow a loan amount of Rs.239.74 Lakhs for " Conversion of existing street lights into energy efficient LED lights (2106 Nos) / Providing new energy efficient LED Lights (2106 Nos) " from Tamil Nadu Urban Finance Infrastructure Development Corporation Ltd (TUFIDCO), under State Urban Infrastructure Development Fund (SUIDF), as per the terms and conditions prescribed by G.O.(Ms)No.145, MA&WS (MA2) Dept., dated 14-10-2022.
2. Resolved that the Panruti Municipality is hereby authorised to execute the loan agreement and other documents, if any with TUFIDCO and complete all other formalities including affixing the common seal of the Panruti Municipality on the documents to be executed with TUFIDCO on behalf of the Panruti Municipality.
3. Resolved that the Panruti Municipality bank account on the revenue collection such as property tax, professional tax and other revenue collections shall be escrowed / to the extent of quarterly / monthly repayment commitment in favour of TUFIDCO. This exclusive escrowed account will be in existence till the time of clearing the loan and all other dues under this project to TUFIDCO.
4. Resolved that the Executive officer be and hereby authorized to make necessary budgetary provisions in the annual budget for the repayment of principal, interest and other monies due for the loan availed for this project proposal to TUFIDCO.
5. Resolved to agree, to adjust by the Government of Tamil Nadu from funds receivable for Panruti Municipality such as Devolution grant payment under State Finance Commission recommendation, other grants, share on tax and stamp duties due from the Government, in the event of default in repayment of principal, interest and other monies due to TUFIDCO in respect of loans availed for this project.
6. The Panruti Municipality shall submit an undertaking stating that if for any reason, the projected increase in property tax, professional tax etc., could not be implemented, the short fall if any arising in any period shall not affect the timely repayment of its dues to TUFIDCO and in such case the Government may be permitted to deduct the said dues out of the SFC funds on the first priority basis.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. Tamil Nadu Urban Finance Infrastructure Development Corporation Ltd (TUFIDCO) நிதி நிறுவனத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி ஒப்பந்தம் செய்து கடன் உதவி பெற்று திட்டத்தினை செயல்படுத்திட மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண் . 554/2021/இ2)**

**25.** பண்ணுருட்டி நகராட்சியில் பிரிண்டர்கள், பணம் எண்ணும் இயந்திரம் மற்றும் கணினி சார்ந்த சாதனங்கள் அவசர அவசியம் கருதி புதிதாக வாங்குவதற்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | GRK Associates | 165450 |
| 2. | Techno solution | 171000 |
| 3. | AIMS Net Cafe | 158500 |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள வ.எண்.3 AIMS Net Cafe நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கவும் அதற்குண்டான தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1 .மன்றம் அனுமதிக்கலாம்

2. இதற்குண்டான தொகை பொது நிதியில் செலவு செய்ய அனுமதி வேண்டப்படுகிறது.

26. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை நக.எண்.21335/202/எம்2, நாள் 15.09.2023 மற்றும் மாவட்ட ஆட்சியர், கடலூர் அவர்களின் அவ்வப்போதை காணொலி ஆய்வுக்கூட்டங்களிலும், வாட்ஸ்ஆப் வழியாக வழங்கப்பட்ட அறிவுறைகளிலும், வரும் மழைக்காலம் நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது . அண்மைப்பகுதிகளில் டெங்கு காய்ச்சல் பாதிப்பு அதிகரித்துள்ளதாலும், முன்னெச்சரிக்கை டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகளை போர்கால அடிப்படையில் மேற்க்கொள்ள வேண்டியுள்ளதால் அவசியம் என்பதாலும் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகளின் சட்டம் 2022, பிரிவு 57—ன் கீழ், ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று கீழ்காணும் டெங்கு தொடர்பான பொருள்கள் வழங்கிட, அரசு அங்கீகாரம் பெற்ற தமிழ்நாடு மட்டிபர்பாஸ், இண்டிகோ சர்வ், திருச்சி என்ற நிறுவனத்திற்கு உத்தரவு வழங்கப்பட்டது. அதற்கான பட்டியல் தொகை ரூ.3,14,057/—ண(ரூபாய் மூன்று லட்சத்து பதினான்காயித்து ஐப்பத்து ஏழு மட்டும்) வழங்கவேண்டியுள்ளது என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ | தேவைப்படும் பொருள்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | டெங்க கொசு உற்பத்தியாகும் இடங்களை கண்டறிதல், 52வார வருடாந்திர காலண்டர் | 15000 |
| 2 | ஏடிஸ் கொசுப்புழு இல்லாத வீடு ஸ்டிக்கர் | 5000 |
| 3 | டெங்கு காய்ச்சல் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு முறைகள் விழிப்புணர்வு நோட்டீஸ் | 15000 |
| 4 | டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்கள் தினசரி பணி அளவீட்டு பதிவேடு படிவம் (100 கொண்ட தொகுப்பு) | 150 |
| 5 | டார்ச் லைட் (சிறியது) | 20 |
| 6 | குளோரோஸ்கோப் கிட் | 10 |
| 7 | கொசு மருந்து அளவை கப் (Measruing Jar) | 35 |
| 8 | Dip கரண்டி | 35 |

**<u>அலுவலகக் குறிப்பு—</u>** மன்றம் அனுமதிக்கலாம்
**(ந.க.எண்.2065/2023/எச்1)**

27. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை நக.எண்.21335/202/எம்2, நாள் 15.09.2023 மற்றும் மாவட்ட ஆட்சியர், கடலூர் அவர்களின் அவ்வப்போதைய காணொலி ஆய்வுக்கூட்டங்களிலும், வாட்ஸ்ஆப் வழியாக வழங்கப்பட்ட அறிவுறைகளிலும் வடகிழக்கு பருவமழை மற்றும் மிக்ஜாம் புயல் எச்சரிக்கை நடவடிக்கையாக மழைக்கால முன்னெச்சரிக்கைநிவாரண உபகரணங்கள் தயார்நிலை வைக்க அறிவுறுத்தப்பட்டது. அவசர அவசியம் கருதி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்காக, தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகளின் சட்டம் 2022, பிரிவு 57—ன் கீழ், ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று கீழ்காணும் உபகரணங்கள் வழங்கிட , தமிழ்நாடு மட்டிபர்பாஸ், இண்டிகோ சர்வ், திருச்சி என்ற நிறுவனத்திற்கு உத்தரவு வழங்கப்பட்டது. அதற்கான பட்டியல் தொகை ரூ.1,67,133/— (ரூபாய் ஒரு இலட்சத்து அறுபத்தேழு ஆயிரத்து நூற்று முப்பத்து மூன்று மட்டும்) வழங்கவேண்டியுள்ளது என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. டார்ச் லைட் (பெரியது) —10 எண்ணிக்கைகள்
2. மழைக்கோட்டு —25 எண்ணிக்கைகள்
3. காலுரை (Gumboot) —25 எண்ணிக்கைகள்
4. மருந்து தெளிப்பான் (Plastic Sprayaer) —5 எண்ணிக்கைகள்
5. பிளிச்சிங் பவுடர் —2000 கிலோ

**<u>அலுவலகக் குறிப்பு—</u>** மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண்.2065/2023/எச்1)**

28. இந்நகராட்சியில் உருவாகும் திடக்கழிவுகளில் விற்பனைக்கு உதவாத பிளாஸ்டிக் உலர் கழிவுகளை அரியலூர் அல்பராடெக் நிறுவனத்திற்கு அனுப்பி வைப்பதற்காக ஏற்கெனவே செய்துள்ள பரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி சேகரமாகி உள்ள பிளாஸ்டிக் உலர் கழிவுகள் தனியார் லாரி மூலம் 18.10.2023 அன்று அனுப்புவைக்கப்பட்டமைக்கான வாடகை ரூ.23000/- D.R.S டிரான்ஸ் போர்ட் நிறுவனத்திற்கு வழங்க வேண்டியுள்ளது. மேற்கண்ட தொகையினை வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.

மேலும் தொடர்ந்து வருங்காலங்களில் அனுப்பி வைப்பதற்குமான தோராய செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கபடவுள்ளது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**கோப்பு எண்: 550/2018/எச்2**

29. இந்நகராட்சியில் பொதுசுகாதாரப் பிரிவில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களுக்கு 2023-24ம் ஆண்டிற்கு வழங்க வேண்டிய கையுறை, முகஉறை, பிரதிபலிப்பாடை, மழைக்கோட்டு ஆகியவற்றை வாங்கி வழங்குவதற்கான தோராய செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கும் அவற்றை அரசு அங்கிகாரம் பெற்ற நிறுவனங்களிடம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**கோப்பு எண். 550/2018/எச்2**

.30 பண்ணுருட்டி நகராட்சி-வருவாய் நிதி 2024-25ன் கீழ் **வார்டு எண்.27** பண்ணுருட்டி நகராட்சி ஆணையாளர் குடியிருப்புக்கு வண்ணம் பூசுதல், கதவு, ஜன்னலை சரி செய்தல், செப்டிக் டேங்க் பழுதுபார்த்தல், மின்சார பணிகள், குடிநீர் பழுது சரி செய்தல், மற்றும் இதர பணிகள் செய்வதற்கு மதிப்பீடு ரூ.3.00/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளுக்கு வருவாய் நிதி 2024-25ன் கீழ் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண். 302/2024/இ1)**

31. பண்ணுருட்டி நகராட்சி-வருவாய் நிதி 2024-25ன் கீழ் **வார்டு எண்.09** சர நாராயணன் தெரு மற்றும் SKV நகர் சிமெண்ட் சாலை மிகவும் சேதம் அடைந்து உள்ளதால் அதனை புதுப்பித்து சாலை அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.4.00/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளுக்கு வருவாய் நிதி 2024-25ன் கீழ் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண். 303/2024/இ1)**

32. பண்ணுருட்டி நகராட்சி-வருவாய் நிதி 2024-25ன் கீழ் நகராட்சி அலுவலகத்தில் உள்ள அனைத்து குளிர்சாதன பெட்டிகளை பழுது சரி செய்தல் மற்றும் மேனேஜர் அறைக்கு புதியதாக AC அமைத்து தருதல் பணிக்கு உத்தேச மதிப்பீடு தொகை ரூ.1.00/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளுக்கு வருவாய் நிதி 2024-25ன் கீழ் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண். 306 /2024/இ1)**

33. பண்ணுருட்டி நகராட்சி-வருவாய் நிதி 2024-25ன் கீழ் **வார்டு எண்.14** எடப்பாளையம் தெரு மற்றும் மண்டப சந்து மழை நீர் வடிகால் அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீடு தொகை ரூ.8.50/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளுக்கு வருவாய் நிதி 2024-25ன் கீழ் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண். 305/2024/இ1)**

34. பண்ணுருட்டி நகராட்சி-வருவாய் நிதி 2024-25ன் கீழ் **வார்டு எண்.20** கெடிலம் ஆற்றங்கரை அருகில் நகராட்சி சுடுகாடு பகுதி முழுவதும் முள்வேலி தடுப்பு அமைக்கும் பணி மற்றும் இடத்தை சரி செய்யும் பணிக்கு உத்தேச மதிப்பீடு தொகை ரூ.8.00/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளுக்கு வருவாய் நிதி 2024-25ன் கீழ் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண். 304/2024/இ1)**

35. பண்ணுருட்டி நகராட்சி - வருவாய் நிதி 2024-25ன் கீழ் பண்ணுருட்டி நகராட்சி காந்தி பூங்கா மிகவும் பழுதடைந்து உள்ளதால் அதனை புதுப்பித்து புதுபொலிவுடன் விளையாட்டு உபகரணங்கள் பழுதுபார்த்தல், மின்விளக்கு அமைத்தல், வண்ணம் பூச்சி மற்றும் இதர பணிக்கு உத்தேச மதிப்பீடு தொகை ரூ.6.00/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளுக்கு வருவாய் நிதி 2024-25ன் கீழ் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண். /2024/இ1)**

36. இந்நகராட்சி பகுதியில் பொது மக்கள் நலன் கருதி வீடுகள் தோறும் கொசுப்புழு கண்டறிந்து அழிக்கும் (DBC) பணியாளர்கள் மாவட்ட ஆட்சியர் மற்றும் துணை இயக்குநர், சுகாதாரப்பணி நலப்பணி, கடலூர் அவர்களில் அறிவுறுத்தலின் பேரில், **01.09.2023** முதல் **29.02.2024** ஒப்பந்த அடிப்படையில் ஸ்ரீராகவேந்திரா மகளிர் சுயஉதவிக்குழு மூலம் நியமித்து பணிசெய்யப்பட்டது. பணிக்காலம் **29.02.2024**—உடன் முடிவடைவதால், பொது சுகாதாரப்பணிகள் நலன் கருதி, மேற்கண்ட பணியாளர்களின் பணியினை அதே தினக்கூலிவிகிதத்தில், மேலும் மூன்று மாதங்கள் **01.03.2024** முதல் **31.05.2024** முடிய காலநீட்டிப்பு செய்துகொள்ளவும், அதற்கான உத்தே செலவினம் ரூ.**9.95** (ரூபாய் ஒன்பது இலட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரம் மட்டும்) மேற்கொளள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு—</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவித்தினை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

**(ந.க.எண்.2081/2022/எச்1)**

37. **இந்நகராட்சியில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற மற்றும் இறந்த பணியாளர்களுக்கு 1974—ம் ஆண்டு முதல் பிற்கால சேமநலநிதிக்கான வட்டித்தொகை கணக்கீடு செய்து வழங்கப்படாமல் உள்ளதால் அனைத்து பணியாளர்களுக்கும் 1974 முதல் 2020—2021 வரை கணினியில் வட்டித்தொகை கணக்கீடு செய்து வழங்குவதற்கு அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தினரை அமர்த்தி பணியினை மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.6.00 லட்சம் மன்றத்தின் அனுமதின்னு வைக்கப்படுகிறது.**

**<u>அலுவலக குறிப்பு:—</u>**

1. **மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண். 2322/2023/சி 1)**

38. பண்ணுருட்டி நகராட்சி எல்லைக்குள் அமைந்திருக்கும் கெடிலம் ஆற்றில் **19.01.2024** அன்று நடைபெறும் ஆற்றுத் திருவிழாவில் அமைக்கும் தற்காலிக கடைகளுக்கு நகராட்சி நிபந்தனைகளின்படி கட்டணங்கள் வசூலிப்பதற்கு **18/01/2024**ல் பொது ஏலம் விட்டதில் கீழ்கண்ட விவரப்படியான நபர்கள்கலந்துகொண்டு கோரியுள்ள ஏலக்கேள்விகள் மன்றத்தின் முடிவுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | உயர்ந்த ஏலக்கேள்விதாரரின் பெயர் மற்றும் முகவரி | தற்காலிக கடைகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | |
|---|---|---|---|
| | | அதிகம் | குறைவு |
| 1 | திரு. கு. வேலவன்<br>த/பெ. குணசேகரன்<br>61கே வ.உ.சி தெரு, பண்ணுருட்டி | ரூ. 14900/— | ரூ. 14750/— |
| 2 | திரு. எல். இராமகிருஷ்ணன்<br>த/பெ. லட்சுமணன்<br>அவையம்பாளையம் தெரு, பண்ணுருட்டி | | |

அலுவலக குறிப்பு

1. மேற்காணும் விவரப்படிக்கான ஏலக்கேள்விகளில் உயர்ந்த ஏலக்கேள்வி ரூ. 14900/— கோரியுள்ள திரு. கு. வேலவன் என்பவரின் ஏலக்கேள்வியை மன்றம் ஏற்கலாம்

2.அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று அதிகபட்ச ஏலக்கேள்வி கோரியுள்ள திரு.கு. வேலவன் என்பவரின் ஏலக்கேள்வியை ஏற்று பணி உத்தரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோ. எண். 73/2023/அ1

39. பண்ணுருட்டி நகராட்சி எல்லைக்குள் அமைந்திருக்கும் கெடிலம் ஆற்றில் **19.01.2024** அன்று நடைபெறும் ஆற்றுத் திருவிழாவில் போது வந்து செல்லும் மிதிவண்டி, ஸ்கூட்டர், இதர வாகனங்கள் நிறுத்துமிடத்திற்கும் கட்டணம் வசூலிக்கும் உரிமம் நகராட்சி நிபந்தனைகளின்படி கட்டணங்கள் வசூலிப்பதற்கு **18/01/2024**ல் பொது ஏலம் விட்டதில் கீழ்கண்ட விவரப்படிக்கான நபர்கள் கலந்துகொண்டு கோரியுள்ள ஏலக்கேள்விகள் மன்றத்தின் முடிவுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | உயர்ந்த ஏலக்கேள்விதாரரின் பெயர் மற்றும் முகவரி | மிதிவண்டி, ஸ்கூட்டர், இதர வாகனங்கள் நிறுத்துமிடத்திற்கும் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | |
|---|---|---|---|
| | | அதிகம் | குறைவு |
| **1** | திரு. கு. வேலவன்<br>த/பெ. குணசேகரன்<br>**61**கே வ.உ.சி தெரு, பண்ணுருட்டி | ரூ. **12100/–** | **12000/–** |
| **2** | திரு. எல். இராமகிருஷ்ணன்<br>த/பெ. லட்சுமணன்<br>அவையம்பாளையம் தெரு,<br>பண்ணுருட்டி | | |

**அலுவலக குறிப்பு**

**1.**மேற்காணும் விவரப்படிக்கான ஏலக்கேள்விகளில் உயர்ந்த ஏலக்கேள்வி ரூ. **12100/–** கோரியுள்ள திரு. கு. வேலவன் என்பவரின் ஏலக்கேள்வியை மன்றம் ஏற்கலாம்.

**2.**அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று அதிகபட்ச ஏலக்கேள்வி கோரியுள்ள திரு.கு. வேலவன் என்பவரின் ஏலக்கேள்வியை ஏற்று பணி உத்தரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்

கோ. எண். 73/2023/அ1

**இடம்– நகராட்சி அலுவலகம்** **நகர்மன்ற தலைவர்**
**நாள் – 16.02.2024** **பண்ணுருட்டி நகராட்சி**